# பேச்சுப் போட்டி – 2024

## ஆண்டு 5

(போட்டி நடைபெறும் நாள் 18/05/2024)

அனைவருக்கும் வணக்கம்.

**நேர்பட ஒழுகு.**

ஔவையார் இயற்றிய நீதி நூல் ஆத்திசூடி. நேர்பட ஒழுகு என்பது ஆத்திசூடியில் உள்ள ஒரு பாடல் வரி.

நேர்பட ஒழுகுதல் என்றால் என்ன? நேர்மையான வழியில் நடக்க வேண்டும் என்பதே இதன் பொருள். உண்மை பேசுதல், பெரியோர்களை மதித்தல், பிறருக்கு உதவி செய்தல், ஒற்றுமையாக வாழ்தல் என்பன இதில் அடங்கும். நாம் இனிமையாகப் பேசுதல், உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல் போன்ற நற்பண்புகளைப் பின்பற்ற வேண்டும். சுய ஒழுக்கமும் நல்ல பழக்கவழக்கங்களும் நேர்பட ஒழுக வழிவகுக்கும்.

நேர்மையானவர்களை எல்லோரும் விரும்புவர். நேர்மையான வாழ்வு உயர்வைத் தரும். வாழ்வின் வெற்றிக்கு நேர்மை மிகவும் அவசியமாகும். நேர்பட ஒழுகினால் அமைதியான மகிழ்ச்சியான வாழ்க்கை அமையும்.

நாம் எல்லோரும் நேர்பட ஒழுகி வாழ்வில் முன்னேற்றம் அடைவோம்.

நன்றி. வணக்கம்.